செய்தி வெளியீடு எண்.355 நாள்.19.5.2008

# நாட்டுப்புறக் கலைச் சிறப்பு பயிற்சிகள் கலை ஆர்வலர்கள் பங்கேற்கலாம் – கலை பண்பாட்டு ஆணையர் அறிவிப்பு

10 வகை நாட்டுப்புறக் கலைகளில் 3 மாதங்கள் சிறப்புப் பயிற்சி அளிப்பது குறித்து கலை ஆர்வலர்கள் விண்ணப்பிக்கலாம் என பின்வருமாறு ஆணையர்(பொ) அறிவித்துள்ளார்.

அ. பயிற்சி அளிக்கப்படும் துறைகள் :

1. தேவராட்டம்
2. தோற்பாவைக்கூத்து
3. ஒயிலாட்டம்
4. பொய்க்கால்குதிரை
5. தப்பாட்டம்
6. பொம்மலாட்டம்
7. கரகம்
8. காவடி
9. தெருக்கூத்து
10. மரபுவழி இசை நாடகம்

**ஆ. பயிற்சிக் காலம்** : ஜூன் முதல் 3 மாதங்கள்

**இ. பயிற்சி தொடங்கும் நாள்** : 31.05.2008

**ஈ. பயிற்சி நடைபெறும் இடம்** : தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி,
கிரீன்வேய்சு சாலை,
சென்னை–28.

பயிற்சிக் காலத்தில் கரகம், காவடி, பொய்க்கால் குதிரை போன்ற கலைப் பொருட்கள் பயிற்சிக்காக தமிழ் பண்பாட்டு கலை மையத்தால் தரப்படும்.

ஒவ்வொரு கலைப் பயிற்சிக்கும் 20 பேர் மட்டுமே தெரிவு செய்யப்படுவார்கள். ஒருவர் ஒரு பயிற்சிக்கு மட்டுமே தெரிவு செய்யப்படுவர். மூத்தக் கலைஞர்களைக் கொண்டு நடைபெறும் இப்பயிற்சியில் பங்கு பெறுவர் தம் சொந்த பொறுப்பில் தங்குமிடவசதியை அமைத்துக் கொள்ள வேண்டும். எனினும் ஒவ்வொரு கலைஞருக்கும் மாத முடிவின்போது உணவு தங்குமிட செலவிற்காக மாதம் ரூ.500/– மட்டும் உதவித்தொகையாக வழங்கப்படும்.

பயிற்சி பெறவுள்ளோர் தங்களது (1) பெயர், (2) அகவை, (3) படிப்பு, (4) முகவரி, (5)தொலைபேசி எண், (6) பயிற்சிப்பெறவிரும்பும் கலை, (7) அக்கலையில் ஏற்கெனவே உள்ள பணியறிவுக்காலம் (8) வேறு துறையில் பயிற்சி பெற்றிருப்பின் அதன் விவரம் ஆகியவற்றை, ஆணையர்(பொ), கலை பண்பாட்டுத் துறை, கிரீன்வேய்சு சாலை, சென்னை–28 என்ற முகவரிக்கு 20.05.2008 ஆம் நாளுக்குள் விண்ணப்பிக்க வேண்டும். தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு விவரம் பின்னர் தெரிவிக்கப்படும்.

இவ்வாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர்(பொ) அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.